**சுற்று நிருப இல. 1990/14**

எனது இல 2/கிபலா/3/18
விளையாட்டு இணைப்பாடவிதான பிரிவு
கல்வி உயர்கல்வி அமைச்சு
இசுருபாய,
பந்தரமுல்ல.
1990.04.30

சகல மாகாண கல்விச் செயலாளர்களுக்கும்,

**பாடசாலை மாணவர்களை பொது வைபவங்களில் கலந்து கொள்ளச் செய்தலும் பேண்டு வாத்தியப் பாவனையும்**

1. கீழ்வரும் வைபவங்களைத் தவிர ஏனைய எவ்வகையான வைபவங்களுக்கும் பாடசாலை மாணவர்களையோ பேண்டு வாத்திய குழுவையோ, பாவிக்க கூடாதென கௌரவ கல்வி உயர்கல்வி அமைச்சர் தீர்மானித்துள்ளார்.
   i. பாடசாலை வைபவங்கள்
   ii. மத்திய அரசு, மாகாண கல்வி அமைச்சு, மாகாண கல்வித் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கல்வி தொடர்பான விழாக்கள்
   iii. தேசிய தின கொண்டாட்டங்கள் (அரசாங்க அதிபர் அல்லது மாகாண சபையினால் ஏற்பாடு செய்தவை)
   iv. அமைச்சு அரச திணைக்களம், பொது நியதிச் சபைகள், மாகாண நிருவாக நிறுவனங்களால் ஒழுங்கமைக்கப்பட்டு அதிமேன்மை தாங்கிய ஜனாதிபதி, பிரதம மந்திரி என்போர் வருகை தரும் விழாக்கள்.
   v. வெளிநாட்டு தலைவர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் சமூகமளிக்கும் விழாக்கள்.

2. மேலே குறிப்பிடப்பட்ட Iம், IIம் வகையான வைபவங்களைப் பொறுத்தவரை அவை இடம் பெறும் ஸ்தலத்திற்குள் நுழையும் வாயிலிலிருந்து 25 மீற்றர் தூரத்திற்கு மேல் தெரு நெடுகிலும் மருங்குகளில் மாணவர்களை நிறுத்தி வைப்பதோ பேண்ட் வாத்திய குழுவினை பாவிப்பதோ கூடாது.
3. பாடசாலை வைபவங்களிலோ அரச அல்லது அரசல்லாத வைபவங்களிலோ தமது பிள்ளைகள் பங்குபற்ற அனுமதிப்பதா இல்லையா என்ற தீர்மானத்தினை மேற்கொள்வதற்கு பெற்றோர் உரிமையுடையவர்கள், ஆகையால் அதிபர்கள் அவ்வாறான விழாக்களில் அல்லது பேண்ட் வாத்திய குழுக்களில் மாணவர்களை பெற்றோர்கள் அனுமதியுடனேயே பங்குபற்றச் செய்தல் வேண்டும்.
4. பாடசாலை மாணவர்களையும், பேண்ட் வாத்திய குழுவினையும் மேற்குறிப்பிட்ட நடைமுறைக்கேற்ப பிரயோகிக்குமாறு மாகாணத்திலுள்ள எல்லா அதிபர்களுக்கும் அறிவுறுத்தவும் இச்சுற்று நிருபத்திலுள்ள ஏற்பாடுகள் இது தொடர்பாக இதற்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபங்களிலுள்ள ஏற்பாடுகளை மேலோங்கி நிற்கும்.

**ஏ.எம்டபிள்யூ யஹம்பதி**
**கல்விப் பணிப்பாளர் (வி.இ)**

**எம்.டி.டி.பீரிஸ்**
**செயலாளர்**
**கல்வி உயர்கல்வி அமைச்சு**

**பிரதிகள்:**

1. எல்லாப் பிரதேசக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்